## பீப்பிள்ஸ் மைக்கிறோ கொமர்ஸ் லிமிட்டட் - 2024 - 2025

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பீப்பிள்ஸ் மைக்கிறோ கொமர்ஸ் லிமிட்டட்டின் (''கம்பனி'') 2025 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

கம்பனியின் 2025 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வங்கி இணக்கத்திற்காக எடுக்கப்பட்ட பொதுப் பேரேட்டு (GL) மீதிக்கும் உண்மையான பொதுப் பேரேட்டு (GL) மீதிக்கும் இடையே ரூபா 1,011,400 வேறுபாடு காணப்பட்டது. | IT குழுவினால் மாத்திரம் சரிசெய்யக்கூடிய ஒரு தொழில்நுட்பம் சார்ந்த பிரச்சினைக்கு, பொருத்தமற்ற தன்மையை அடையாளம் காண்பதற்கு கூடுதல் நேரம் தேவைப்பட்டது. எனினும், கணக்காய்வின் போது இவ் வேறுபாடு சரி செய்யப்பட்டது. | பொதுப் பேரேட்டு (GL) மீதிக்கும் இணக்கத்திற்குப் பயன்படுத்தப்படும் மீதிகளுக்கும் இடையிலான முரண்பாடுகளைத் தடுக்க, வங்கி இணக்கச் செயல்முறையின் மீதான கட்டுப்பாடுகளை முகாமைத்துவம் வலுப்படுத்துவதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது. |

## 1.6 தகவல் தொழில்நுட்ப பொதுவான கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| i) பதவி விலகிய ஊழியர்களின் பயனாளிகளின் கணக்குகள் செயலிழக்கச் செய்யப்படவில்லை என்பதுடன், MicroFin கட்டமைப்பின் செயற்பாட்டில் இருப்பதும், InBank மற்றும் MicroFin கட்டமைப்புகளில் சில கணக்குகள், அவர்களின் பதவிவிலகிய திகதிக்குப் பிறகு, 2025 மார்ச் 31ஆந் திகதிய நிலவரப்படி, சரியான நேரத்தில் செயலிழக்கச் செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.<br><br>தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரியின்படி, பதவி விலகிய ஊழியரின் பயனாளியின் கணக்கு செயலிழக்காமல், MicroFin கட்டமைப்பின் செயற்பாட்டில் இருந்த விவரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. | பதவி விலகிய பட்டியலை சரியான நேரத்தில் அனுப்புமாறு பீப்பிள்ஸ் மைக்ரோ காமர்ஸ் லிமிடெட்டின் மனிதவளத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டது. | MicroFin கட்டமைப்பில் பதவி விலகிய ஊழியர்களின் பயனாளிகளின் கணக்குகள் உடனடியாக முடக்கப்படுவதை உறுதிசெய்ய, முகாமைத்துவமானது பயனாளிகள் அணுகல் முகாமைத்துவ கட்டுப்பாடுகளை வலுப்படுத்த வேண்டும். |

| பயனாளியின் அ.அட்டை | பயனாளியின் நிலை (குறிப்பு 1) | இறுதியாக உள்நுழைவு (திகதி/மாதம்/வருடம்) | பதவி விலகிய திகதி (திகதி/மாதம்/வருடம்) |
|---|---|---|---|
| ஆர்.வினோத்யா | ஆம் | 15/01/2025 | 26/01/2025 |

மைக்ரோ.்.பின் கட்டமைப்பில் பயனாளியின் கணக்கு செயலிழக்கச் செயல்பாட்டில் நிலவும் குறிப்பிடத்தக்க தாமதங்கள் தொடர்பான விவரங்களை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| ஊழியர் இல | பயனாளியின் அ.அட்டை | செயலிழந்த திகதி (திகதி/மாதம்/வருடம்) | பதவி விலகிய திகதி (திகதி/மாதம்/ வருடம்) | தாமதம் (குறிப்பு 3) |
|---|---|---|---|---|
| 30751 | யு.இண்டிக்கா | 09/05/2024 | 06/05/2024 | 3 |
| 30755 | பி.ஏ.இசுரு | 15/10/2024 | 07/10/2024 | 8 |
| 30769 | ஆர்.பி டில்ஷான் | 09/05/2024 | 03/05/2024 | 6 |
| 30774 | கே.ஷெனாலி | 27/05/2024 | 08/04/2024 | 49 |
| 30777 | எம்.ஆர். திசர் | 20/06/2024 | 18/06/2024 | 2 |
| 30832 | யு.சமிந்து | 15/08/2024 | 26/06/2024 | 50 |
| 30807 | ஆர்.ரமேஸ் | 05/11/2024 | 26/10/2024 | 10 |
| 30809 | சி.கே.சௌமியா | 15/08/2024 | 10/08/2024 | 5 |
| 30811 | எம்.எஸ்.ஹஷின் | 30/09/2024 | 25/09/2024 | 5 |
| 30812 | எல்.நவீன் | 30/06/2024 | 28/06/2024 | 2 |
| 30816 | ஏ.சமுதி | 02/01/2025 | 31/10/2024 | 63 |
| 30817 | ஏ. ஹெஷானி | 30/06/2024 | 25/06/2024 | 5 |
| 30819 | ஏ.லக்ருவன் | 30/06/2024 | 28/06/2024 | 2 |
| 30826 | ஏ.வி.தரிந்து | 04/10/2024 | 27/09/2024 | 7 |
| 30838 | டி.விஹங்கா | 20/06/2024 | 10/05/2024 | 41 |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 254,640,669 தொகையான வரிக்கு முன்னரான இலாபமொன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 186,155,736 தொகையாகக் காணப்பட்டது. ஆகையினால், நிதி விளைவில் ரூபா 68,484,933 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. வட்டி வருமானம் ரூபா 190,206,068 ஆல் அதிகரித்தமையே இம் முன்னேற்றத்திற்கான காரணமாகும்.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் அதற்கு முன்னைய நான்கு ஆண்டு காலப்பகுதியில் கம்பனியின் நிதி பெறுபேறுகளை பின்வரும் அட்டவணை சுருக்கமாகக் குறிப்பிடுகிறது.

| ஆண்டு | 2024/2025<br>ரூபா. | 2023/2024<br>ரூபா. | 2022/2023<br>ரூபா. | 2021/2022<br>ரூபா. | 2020/2021<br>ரூபா. |
|---|---|---|---|---|---|
| **கம்பனி** | | | | | |
| **வட்டி வருமானம்** | **1,075,853,992** | **885,647,924** | **765,081,162** | **793,186,355** | **819,027,057** |
| முரண் | 190,206,068 | 120,566,762 | (28,105,193) | (25,840,702) | 23,972,379 |
| அதிகரிப்பு/(குறைவு) % | 21.48% | 15.76% | -3.54% | -3.16% | 3.02% |
| **கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **142,820,045** | **52,513,481** | **25,198,879** | **62,959,329** | **48,967,426** |
| முரண் | 90,306,564 | 27,314,602 | (37,760,450) | 13,991,903 | 2,169,239 |
| அதிகரிப்பு/(குறைவு) % | 171.97% | 108.40% | -59.98% | 28.57% | 4.64% |
| **வட்டிச் செலவு** | **279,562,026** | **388,057,922** | **514,286,414** | **793,186,355** | **218,015,318** |
| முரண் | (108,495,896) | (126,228,492) | (278,899,941) | 575,171,037 | (47,144,089) |
| அதிகரிப்பு/(குறைவு) % | -27.96% | -24.54% | -35.16% | 263.82% | -17.78% |
| **அழிவு நட்டக் கட்டணம்** | **17,988,539** | **(65,080,134)** | **(112,894,051)** | **45,484,291** | **119,971,127** |
| முரண் | 83,068,673 | 47,813,917 | (158,378,342) | (74,486,836) | (76,938,211) |
| அதிகரிப்பு/(குறைவு) % | -127.64% | -42.35% | -348.20% | -62.09% | -39.07% |
| **தனிப்பட்ட செலவுகள்** | **291,905,653** | **192,339,946** | **161,785,320** | **142,204,009** | **139,934,699** |
| முரண் | 99,565,707 | 30,554,626 | 19,581,311 | 2,269,310 | 2,966,841 |
| அதிகரிப்பு/(குறைவு) % | 51.77% | 18.89% | 13.77% | 1.62% | 2.17% |
| **வருமான வரிச் செலவு** | **101,803,214** | **75,145,446** | **22,025** | **79,766,376** | **69,377,355** |
| முரண் | 26,657,768 | 75,123,421 | (79,744,351) | 10,389,021 | 45,894,876 |
| அதிகரிப்பு/(குறைவு) % | 35.47% | 341082.50% | -99.97% | 14.97% | 195.44% |
| **ஆண்டுக்கான தேறிய இலாபம்** | **152,837,455** | **111,010,290** | **67,028,756** | **196,856,866** | **132,678,926** |
| முரண் | 41,827,165 | 43,981,534 | (129,828,110) | 64,177,940 | 107,186,875 |
| அதிகரிப்பு/(குறைவு) % | 37.68% | 65.62% | -65.95% | 48.37% | 420.47% |
| **வரிக்கு முன் இலாபம்** | **254,640,669** | **186,155,736** | **67,050,781** | **276,623,242** | **202,056,281** |
| முரண் | 68,484,933 | 119,104,955 | (209,572,461) | 74,566,961 | 153,081,751 |
| அதிகரிப்பு/(குறைவு) % | 36.79% | 177.63% | -75.76% | 36.90% | 312.57% |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கம்பனியின் குறித்த சில முக்கிய விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| Company Specific Ratio | 2024/25 | 2023/24 | 2022/23 | 2021/22 | 2020/21 |
|---|---|---|---|---|---|
| சொத்து மீதான திரும்பல் (%) | 3.08 | 3.77 | 2.54 | 6.41 | 4.94 |
| உரிமை மீதான திரும்பல் (%) | 19.75 | 17.82 | 13.08 | 37.96 | 36.09 |
| தேறிய இலாப விகிதம் (%) | 12.54 | 11.83 | 8.48 | 22.99 | 15.29 |
| மூலதனத்திற்கான கடன் விகிதம் (தடவைகள்) | 5.41 | 3.72 | 4.14 | 4.92 | 6.3 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 வாகனத் தொகுதியின் முகாமைத்துவம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பீப்பிள்ஸ் மைக்ரோ-காமர்ஸ் லிமிடெட் (PML) கம்பனியின் வாகனப் பதிவுகள் மீதான கணக்காய்வு விசாரணையில், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் (RMV) பராமரித்து வரும் பதிவுகளுக்கும் கம்பனியினால் பராமரிக்கப்படும் பதிவுகளுக்கும் இடையே முரண்பாடுகள் இருப்பது தெரியவந்தது. RMV தரவுகளின்படி 2025 மார்ச் 6 ஆந் திகதிய நிலவரப்படி நான்கு வாகனங்கள் கம்பனியின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளன, அதேவேளை 2025 பெப்ரவரி 21 ஆந் திகதிய நிலவரப்படி ஒரே ஒரு வாகனத்தின் உரிமையை மாத்திரமே கம்பனி அறிக்கையிட்டுள்ளது. மேலும், RMV பதிவுகளின்படி கம்பனியின் பெயரில் பதிவு செய்யப்பட்ட இரண்டு வாகனங்கள் 2025 ஏப்ரல் 23 ஆந் திகதிய நிலவரப்படி புதுப்பிக்கப்படவில்லை அல்லது மாற்றப்படவில்லை. விபத்துகள் காரணமாக முழுமையாக சேதமடைந்ததாகவும், காப்புறுதிக் கோரிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்ட BHU–2420 மற்றும் BIQ–6580 இலக்கங்களைக் கொண்ட வாகனங்கள், RMVயின் பதிவுகளில் கம்பனியின் உரிமையின் கீழ் தொடர்ந்து பேணப்படுகின்றன. இந்த முரண்பாடுகள் வாகனப் பதிவுகளைக் கண்காணித்தல் மற்றும் புதுப்பிப்பதில் உள்ள பலவீனங்களைக் குறிக்கின்றன. கம்பனியின் சரியான சொத்துப் பதிவுகளைப் பராமரிக்க, சரியான நேரத்தில் ரத்துசெய்தல் மற்றும் உரிமை மாற்றுவதை உறுதி செய்வதற்கு முகாமைத்துவம் அவதானம் செலுத்தவேண்டும் | வாகனப் பதிவுகளில் உள்ள முரண்பாடுகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளை முகாமைத்துவம் ஏற்றுக்கொள்கின்றது. மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் (RMV) பதிவுகளைப் புதுப்பிப்பதற்கும், முழுமையான சேதங்களாக முறைப்பாடளிக்கப்பட்ட வாகனங்களின் உரிமையை மாற்றுவதற்கும் அல்லது ரத்து செய்வதற்கும் கம்பனி ஏற்கனவே தேவையான நடவடிக்கைகளைத் ஆரம்பித்துள்ளது. காப்புறுதி உரிமைகோரல் தீர்வுகளை நிறைவு செய்வதிலும், தொடர்புடைய அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெறுவதிலும் உள்ள நடைமுறைத் தேவைகள் காரணமாக RMV பதிவுகளைப் புதுப்பிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டன. எதிர்காலத்தில் வாகனப் பதிவு விவரங்கள் கம்பனியின் நிலையான சொத்துப் பதிவுகளுடன் சரியாக ஒத்துப்போவதை உறுதிசெய்ய சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை முகாமைத்துவம் உறுதியளிக்கிறது. | கம்பனியின் பதிவுகளுக்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் (RMV) பராமரிக்கப்படும் பதிவுகளுக்கும் இடையில் சரியான மற்றும் உறுதித்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக, வாகனப் பதிவுகளை கண்காணித்தல் மற்றும் புதுப்பித்தல் மீதான கட்டுப்பாடுகளை முகாமைத்துவமானது வலுப்படுத்த வேண்டும். அனைத்து வாகன கொள்வனவுகள், அகற்றல்கள், முழுமையான சேத நிகழ்வுகள் மற்றும் உரிமை மாற்றங்கள் ஆகியவை உடனடியாக RMVக்குத் தெரிவிக்கப்பட்டு, கம்பனியின் பதிவுகள் மற்றும் RMVயின் பதிவுகள் இரண்டிலும் புதுப்பிக்கப்படுவதைத் தாமதமின்றி சரிபார்க்க ஒரு முறையான செயன்முறையொன்று உருவாக்கப்படுதல் வேண்டும். |